**அக்டோபர் – 12**

# TNPSC துளிகள்


- பிரதான் மந்திரி ஸ்வஸ்திய சுரக்சா யோஜனா என்ற திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் தலா 150 இடங்களைக் கொண்ட 6 புதிய மருத்துவக் கல்லூரிகளை அமைப்பதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கான 60% செலவினங்களை மத்திய அரசு ஏற்க இருக்கின்றது.
    - இந்த நடவடிக்கையானது தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கையை 30 ஆக உயர்த்த இருக்கின்றது.
- உலகின் மிகப்பெரிய முப்பரிமாண அச்சுப் பொறியானது உலகின் மிகப்பெரிய முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட படகு ஒன்றை உருவாக்கியுள்ளது. அமெரிக்காவின் மைனே பல்கலைக் கழகம் இந்த 25 அடி நீளம் கொண்ட, 5,000 பவுண்டுகள் மதிப்புள்ள படகை உருவாக்கியது. மேலும் அதன் கடல் பயணத்திற்கான தகுதியும் நிரூபிக்கப் பட்டது.
- பாலின வேறுபாடுகளை உடைத்தெறிதல் மற்றும் திருநங்கைகளின் சமூகத்தினருக்குச் சமத்துவத்தை உறுதி செய்தல் ஆகியவற்றிற்காக நாட்டின் முதலாவது திருநங்கை விமானியாக மாற 20 வயதான ஆடம் ஹாரியின் விமானப் பயிற்சிக் கட்டணங்களை ஏற்க கேரள அரசு முடிவு செய்துள்ளது.
    - ஆடம் ஏற்கனவே ஒரு தனியார் விமானிக்கான உரிமத்தை வைத்திருக்கின்றார். மேலும் அவர் ஒரு திருநங்கை என்பதால் அவரது குடும்பத்தினரால் அவர் ஏற்றுக் கொள்ளப் படாமல் இருக்கின்றார்.
- மும்பை பல்கலைக் கழகத்தின் முதலாவது "அங்கீகரிக்கப்பட்ட" திருநங்கை மாணவரான சந்தோஷ் லோண்டே (மாற்றிக் கொண்ட பெயர் ஸ்ரீதேவி) என்பவர் உளவியல் மற்றும் சமூகவியல் ஆகிய இரண்டு பிரிவுகளுடன் பட்டப் படிப்பை நிறைவு செய்துள்ளார்.
    - இந்தப் பல்கலைக் கழகம் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு "பாலினத்திற்கான மூன்றாவது பிரிவை" அறிமுகப் படுத்தியது. அதன் பின்னர் இந்தப் பிரிவில் ஸ்ரீதேவி தனது பெயரைப் பதிவு செய்தார்.
- சந்திரயான் - 2 ஆர்பிட்டரின் சூரிய ஒளி மீதான x கதிர் கண்காணிப்பியானது தொடர்ச்சியான சூரிய ஒளிச் சிதறல்களை (எரிப்புகளை) கண்டறிந்துள்ளது. இதனால் சந்திரனில் தாதுக்கள் இருப்பதை சோதிக்கும் சந்திராயன் – 2ன் திறன் நிரூபிக்கப் பட்டுள்ளது.
- நெதர்லாந்து நாட்டிற்கான இந்தியத் தூதரான வேணு ராஜமோனி என்பவர் ஆம்ஸ்டர்டாமில் உள்ள ரிஜக்ஸ் மியூசியத்தில் “இந்தியா மற்றும் நெதர்லாந்து, கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம்” என்ற தலைப்பைக் கொண்ட தனது புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.
    - நெதர்லாந்தின் மன்னர் வில்லெம் – அலெக்சாண்டர் இந்த புத்தகத்தின் முதலாவது பிரதியை நெதர்லாந்து ராணி மெக்ஸிமா முன்னிலையில் பெற்றார். இவர்கள் அக்டோபர் மாதத்தில் இந்தியாவிற்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- மகாத்மா காந்தியின் 150வது பிறந்த நாளை முன்னிட்டு ஒரு நினைவு நாணயத்தை வெளியிடுமாறு பாகிஸ்தான் வம்சாவளியைச் சேர்ந்த பிரிட்டிஷ் நிதித் துறை சஜித் ஜாவித் என்பவர் அந்நாட்டின் நாணய அச்சகத்திற்கு அறிவுறுத்தியுள்ளார்.
- லட்சுமி விலாஸ் வங்கி மற்றும் அடமான அடிப்படையில் கடன் வழங்கும் நிறுவனமான இந்தியா புல்ஸ் வீட்டுவசதி நிதியியல் நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையிலான

இணைப்புத் திட்டத்தை இந்திய ரிசர்வ் வங்கி நிராகரித்துள்ளது.

# தேசியச் செய்திகள்

## தொழில்துறை உற்பத்தியின் வீழ்ச்சி

- நாட்டின் தொழில் துறை உற்பத்தியானது ஏறக்குறைய ஏழு ஆண்டுகளில் மிக மிக வேகமாக சரிந்து, கடந்த இரண்டு ஆண்டுகளில் முதல்முறையாக மிக மோசமாக குறைந்துள்ளது.
- முக்கியமான பொருள்களின் உற்பத்தி, மூலதனப் பொருட்கள் மற்றும் நுகர்வோர் பயன்படுத்தும் பொருட்களின் துறைகள் ஆகியவற்றில் கடுமையான சரிவு ஏற்பட்டதால் இந்த வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.
- அக்டோபர் 11 ஆம் தேதியன்று மத்தியப் புள்ளியியல் அலுவலகம் வெளியிட்டுள்ள தொழில்துறை உற்பத்தி குறியீட்டுத் தரவுகளின்படி, இந்தியாவின் தொழில்துறை உற்பத்தியானது ஆகஸ்ட் மாதத்தில் (மாதத்தின் அடிப்படையில்) 1.1 சதவீதம் என குறைந்துள்ளது.
- தொழில்துறை உற்பத்தி அல்லது தொழிற்சாலை உற்பத்தி என்பது நாட்டின் வணிகப் பரப்பில் பொருளாதார நடவடிக்கைகளை அளவிடுவதற்கான ஒரு மிக நெருக்கமான குறியீடாகும்.
- இதன் அடிப்படை ஆண்டு 2011-12 ஆகும்.




## முதலாவது சர்வதேச கூட்டுறவுக் கண்காட்சி @ புது தில்லி

- முதலாவது 'இந்திய சர்வதேச கூட்டுறவு வர்த்தக கண்காட்சியானது' புது தில்லியில் தொடங்கி வைக்கப்பட்டது.
- 3 நாட்கள் நடைபெறும் இந்தக் கண்காட்சியானது கூட்டுறவுப் பொருட்களின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கான ஒரு முக்கிய தளமாக விளங்கும். இது மேம்பட்ட கிராமப்புற மற்றும் பண்ணைகள் வளர்ச்சி ஆகியவற்றிற்கு வழிவகுக்கும்.

- இந்த கண்காட்சியில் 35 நாடுகளைச் சேர்ந்த அமைப்புகளும் 150க்கும் மேற்பட்ட இந்தியக் கூட்டுறவு நிறுவனங்களும் பங்கேற்கின்றன.
- மேலும் மத்திய வேளாண் துறை அமைச்சரான நரேந்திர சிங் தோமர் "யுவ சஹாகர்" என்ற 2019 ஆம் ஆண்டின் கூட்டுறவு நிறுவன ஆதரவு மற்றும் புத்தாக்கத் திட்டத்தையும் தொடங்கி வைத்தார்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ககன்யான் பயிற்சி @ ரஷ்யா - குடிமக்கள் பரிட்சயம் @ VSSC

- இந்தியாவின் முதலாவது மனித விண்வெளித் திட்டமான 'ககன்யான்' என்ற திட்டமானது 2022 ஆம் ஆண்டில் விண்வெளிக்குச் செலுத்தப்பட இருகின்றது.
- அனுபவம் வாய்ந்த இந்திய விமானப் படை விமானிகளிடமிருந்துப் பெறப்படும் ககன்யான் குழுவினருக்கான பயிற்சியானது ஏற்கனவே ரஷ்யாவில் தொடங்கி விட்டதாக விக்ரம் சரபாய் விண்வெளி மையத்தின் (Vikram Sarabhai Space Centre - VSSC) இயக்குனரான S.சோம்நாத் தெரிவித்துள்ளார்.
- குறுகிய கால அளவு கொண்ட ககன்யான் திட்டமானது பூமியிலிருந்து 300-400 கி.மீ தூரத்திற்குள் புவியின் தாழ் சுற்று வட்டப் பாதையில் மேற்கொள்ளப்பட இருக்கின்றது.
- மேலும் உலக விண்வெளி வாரம் - 2019 மற்றும் குடிமக்கள் பரிட்சயத் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்தியா முழுவதும் உள்ள 400 மூத்த குடிமக்களையும் VSSC இதற்காக அழைத்துள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## வருடாந்திர கங்கை டால்பின் கணக்கெடுப்பு

- 'எனது கங்கை, எனது டால்பின்' என்ற பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக இயற்கைக்கான உலகளாவிய நிதியத்தின் உறுப்பினர்கள் (இந்தியா) மற்றும் உத்தரப் பிரதேச வனத் துறை உறுப்பினர்கள் ஆகியோர் இணைந்து வருடாந்திர கங்கை டால்பின் கணக்கெடுப்பைத் தொடங்கினர்.
- ஹஸ்தினாபூர் வனவிலங்கு சரணாலயம் மற்றும் மேல்கங்கை பகுதியில் உள்ள நரோரா ராம்சார் தளம் ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகளும் இந்தக் கணக்கெடுப்புக் குழுவில் இணைந்தனர்.
- டால்பின் கணக்கெடுப்பானது 2015 ஆம் ஆண்டில் முதன்முதலில் தொடங்கப்பட்ட வருடாந்திர டால்பின் கணக்கெடுப்பு பயிற்சியின் ஒரு பகுதியாகும்.
- மூன்று டால்பின் குட்டிகள் உட்பட, 33 டால்பின்கள் 2018 ஆம் ஆண்டில் அங்கு காணப்பட்டன.
- கங்கை நதி டால்பின் ஆனது இந்திய அரசாங்கத்தால் அதன் தேசிய நீர்வாழ் விலங்காக அங்கீகரிக்கப் பட்டுள்ளது.
- மேலும் இது கவுஹாத்தி நகரத்தின் அலுவல் விலங்காகவும் இருக்கின்றது.

### *கணக்கெடுப்பு நடத்தப்படும் பகுதிகள்*

- வழக்கமாக இந்தக் கணக்கெடுப்பானது உத்தரப் பிரதேசத்தின் ஹஸ்தினாபூர் வனவிலங்கு சரணாலயத்திற்குள் ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கிய கங்கை நதியில் உள்ள பிஜ்னோர் தடுப்பணையிலிருந்து நரோரா தடுப்பணை வரை மேற்கொள்ளப் படுகின்றது.

*2019 ஆம் ஆண்டில் இந்த கணக்கெடுப்பு நடத்தப்படும் கூடுதலான பகுதிகள்*

- இந்தக் கணக்கெடுப்பானது உத்தரகாண்ட் மாநிலத்தின் பிஜ்னோரில் இருந்து தொடங்கி 255 கிலோ மீட்டர் பரப்பளவுள்ள நரோரா தடுப்பணையில் இருக்கும் ராம்சார் தளம் வரை மேற்கொள்ளப் படுகின்றது.

*முறைகள்*

- டேன்டெம் படகுக் கணக்கெடுப்பு முறையைப் பயன்படுத்தி டால்பின் நிபுணரான கில் பிராலிக் என்பவரின் உதவியுடன் இந்தக் கணக்கெடுப்பானது மேற்கொள்ளப்பட இருக்கின்றது.
- இது இரண்டு படகுகளைக் கொண்டுள்ளது. இந்தப் படகுகள் ஒவ்வொன்றும் சில பார்வையாளர்கள் மற்றும் ஒரு தரவுப் பதிவாக்க நிபுணரைக் கொண்டிருக்கும்.

# மாநிலச் செய்திகள்

## உத்தரகாண்ட் நடமாடும் ரதங்கள் – வன விலங்கு வாரம்

- மனித-விலங்கு மோதலைக் கையாளுவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக உத்தரகாண்ட் வனத் துறை நடமாடும் ரதங்களை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்த ரதங்கள் அக்டோபர் 1 ஆம் தேதி தொடங்கப்பட்டன. மேலும் இது வனவிலங்கு விழிப்புணர்வு வாரம் தொடர்புடையதாகவும் இருக்கின்றது.
- மனித - விலங்கு மோதல்கள், அதனால் ஏற்படும் உயிர் இழப்புகளை எவ்வாறு தடுப்பது என்பது குறித்து மக்களுக்கு உணர்த்துவதற்காக அவர்கள் மாநிலம் முழுவதும் பயணம் மேற்கொள்ள இருகின்றார்கள்.
- உள்ளூர் மக்களுக்கு இது குறித்த திரைப்படங்கள் காண்பிக்கப்படும். இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வனவிலங்குகளைப் பற்றிய கூட்டங்கள் நடத்தப் படும்.
- உத்தரகாண்ட் மாநிலத்தின் பித்தோர்கர், சம்பாவத், பவுரி மற்றும் அல்மோரா ஆகிய மாவட்டங்களில் சிறுத்தை தாக்குதல்கள் அடிக்கடி நிகழ்கின்றன.



### கன்யாஶ்ரீ பல்கலைக் கழகம் @ மேற்கு வங்கம்

- கன்யாஶ்ரீ திட்டத்தின் கீழ் மாநிலம் முழுவதும் கன்யாஶ்ரீ பல்கலைக் கழகம் மற்றும் கன்யாஶ்ரீ கல்லூரிகளை அமைக்க மேற்கு வங்க அரசு முயற்சி எடுத்துள்ளது.
- அம்மாநில முதல்வர் மம்தா பானர்ஜி கடந்த ஜனவரி மாதத்தில் நாடியா மாவட்டத்தில் கிருஷ்ணா நகரில் ஒரு புதிய பல்கலைக் கழகத்திற்கு அடிக்கல் நாட்டினார்.
- கன்யாஶ்ரீ பல்கலைக் கழகமானது பெண்களுக்கு மட்டுமே உரிய ஒரு பல்கலைக் கழகமாக இருக்கும்.
- பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பெண்கள் படிப்பதை உறுதி செய்வதும் 18 வயது வரை தங்களின் (பெண்களின்) திருமணங்களைத் தாமதப் படுத்துவதும் இந்த திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.


*இதுபற்றி*

- மேற்கு வங்க மாநில அரசு 2013 ஆம் ஆண்டில் கன்யாஶ்ரீ திட்டத்தை ஆரம்பித்தது.
- இந்தத் திட்டம் 2017 ஆம் ஆண்டில் பொதுச் சேவைக்காக ஐ.நா விருதை வென்றுள்ளது.

## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### 2019 ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசு

- எத்தியோப்பியப் பிரதமரான அபி அகமது 2019 ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசினை வென்றுள்ளார்.
- அமைதி மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை அடைவதற்கான அவருடைய முயற்சிகளுக்காகவும் அண்டை நாடான எரித்திரியாவுடனான நீண்டகால மோதலைத் தீர்ப்பதற்காக அவர் எடுத்த நடவடிக்கைகளுக்காகவும் அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டது.
- எத்தியோப்பியாவும் எரித்திரியாவும் 1998 முதல் 2000 வரை தங்களுடைய எல்லையில் போரில் ஈடுபட்டன. நீண்ட காலப் பகையாளிகளான இந்த இரு நாடுகளுக்கிடையே விரோதமானது பல ஆண்டுகளாக தொடர்ந்தது.
- 2018 ஆம் ஆண்டு ஜூலை 9 அன்று, எரித்திரியாவின் தலைநகரான அஸ்மாராவில் நடந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க சந்திப்பைத் தொடர்ந்து, அபி அகமது மற்றும் எரித்திரிய அதிபர் இசையஸ் அஃப்வெர்கி ஆகியோர் கடந்த 20 ஆண்டுகால மோதலை முறையாக முடிவுக்குக் கொண்டு வந்தனர்



## கத்ரி கோபால்நாத் மறைவு

- பத்மஸ்ரீ விருது பெற்றவரும் பிரபல சாக்சபோன் இசைக் கலைஞருமான கத்ரி கோபால்நாத் சமீபத்தில் காலமானார்.
- கர்நாடக இசையில் ஜாஸ் வகைக் கருவியான சாக்ஸபோனைப் பிரபலப் படுத்தியதற்காக கத்ரி கோபால்நாத் வெகுவாக அறியப் படுகின்றார்.
- லண்டனில் உள்ள புகழ்பெற்ற ராயல் ஆல்பர்ட் அரங்கில் இசை நிகழ்ச்சிகளை நிகழ்த்திய ஒரு சில கர்நாடக இசைக் கலைஞர்களில் இவரும் ஒருவர் ஆவார்.

## துணைக் குடியரசுத் தலைவருக்கு "ஆர்டர் ஆஃப் கிரீன் கிரசெண்ட்" விருது

- இந்தியத் துணைக் குடியரசுத் தலைவரான எம்.வெங்கையா நாயுடு ஆப்பிரிக்கத் தீவு தேசமான கொமொரோஸின் மிக உயர்ந்த குடிமக்கள் விருதான "ஆர்டர் ஆஃப் கிரீன் கிரசெண்ட்" என்ற விருதைப் பெற்றுள்ளார்.
- இந்த விருதானது மோரோனியில் அந்நாட்டு அதிபரான அசாலி அசாமவுனியால் இவருக்கு வழங்கப்பட்டது.
- மோரோனி நகரம் ஆனது ஆப்பிரிக்காவின் கிழக்குக் கடற்கரையில் உள்ள கொமொரோஸ் தீவுக் கூட்டத்தின் தலைநகரம் ஆகும்.
- 2017 ஆம் ஆண்டில் வெங்கையா நாயுடு துணைக் குடியரசுத் தலைவரான பிறகு இது அவருக்கு கிடைத்த இரண்டாவது சர்வதேச கௌரவமாகும்.
- இந்த ஆண்டு மார்ச் மாதத்தில் கோஸ்டாரிக்காவில் உள்ள ஐக்கிய நாடுகளின் அமைதி பல்கலைக் கழகமானது நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சராக நிலையான வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பங்களிப்பிற்காக அவருக்கு ஒரு கௌரவ முனைவர் பட்டத்தை வழங்கியது.
- இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் சியரா லியோன் மற்றும் கொமொரோஸின் அரசு முறை சுற்றுப் பயணத்தில் தற்போது உள்ளார்.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★